

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

V.M. Manjunath.

22 JUN 2026

ET 575858
R. LALITHA
STAMP VENDOR
Lic. No. R. Dis/109/B4/88
64, Thambu Chetty Street,
Chennai - 600 001

மனுதாரர்:

V.M.மஞ்சுநாத் (உரிமையாளர்)
எண்: 54, முதல் தெரு, ஜெய் இந்திரா நகர்,
குடியாத்தம், வேலூர்-632602.

பெறுநர்:

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்
எண்.133, G-பிளாக், முதல் நிழற்சாலை,
அண்ணாநகர் (கிழக்கு), சென்னை – 600102.

பொருள்: தளவமைப்பு" (Layout) செய்யப்பட்ட நிலத்தின் மேல் சென்ற மின் அழுத்த கம்பி மாற்றி அமைக்கப்பட்டது தொடர்பான விளக்கம்..

மதிப்பிற்குரிய!

அதிகாரி அவர்களுக்கு வணக்கம். நான் **12/03/2026** அன்று தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் நான் அதிகார உரிமையாளராக உள்ள சர்வே எண்: **67/2A1, 67/2B1A, 67/3A, 67/3C1A** யை கொண்ட சுமார் **6150.00** சதுர மீட்டர் அளவுள்ள நிலத்தை "**தளவமைப்பு**" **(Layout)** செய்து TNRERA வின் ஒப்புதல் பெற **விண்ணப்ப எண்: TNRERA/PLI/1923/2026** பதிவு செய்து இருந்தேன்.

V.M. Manjunath

என் விண்ணப்பத்தை ஆய்வு மேற்கொண்ட நீங்கள் தளவமைப்பு செய்யப்பட்ட நிலத்தின் மீது மின் அழுத்த கம்பி பாதை செல்வதால் அதை மாற்றி அமைத்து மின் கட்டண ரசீதை இணைக்குமாறு என் விண்ணப்பத்தின் மீது **10/04/206** அன்று வினவல் **(QUERY)** செய்திருந்தீர்.

ஆனால் தங்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் தளவமைப்பு செய்யப்பட்ட என்னுடைய நிலத்தின் மீது எந்தவிதமான மின் கம்பங்களும் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தளவமைப்பு செய்யப்பட்ட நிலத்தின் தென்மேற்கு பகுதி வழியாக மின் அழுத்த கம்பி மட்டுமே சென்றது. அதையும் மின் வாரியம் மூலம் வேறு இடத்திற்கு மாற்றியுள்ளோம். அதற்கு ஆதாரமாக தான் மின்வாரிய உதவி பொறியாளர் அவர்களின் கையொப்பம் மற்றும் முத்திரையிட்ட சான்றிதழை ஆதாரமா **12/06/2026** அன்று பதிவேற்றிருந்தேன்.

தளவமைப்பு செய்யப்பட்ட நிலத்தின் மீது எந்த விதமான மின் கம்பங்களும் இல்லை என்பதையும், நிலத்தின் தென்மேற்கு பகுதி வழியாக சென்ற மின் கம்பியும் சற்று நகர்த்தி வேறு இடத்திற்கு மாற்றிவிட்டோம் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன். மேலும் மின் கம்பங்களை அகற்றும் போது தான் மின் கட்டண ரசீது பெறமுடியும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் தாங்கள் மின் கட்டண ரசீதை தான் இணைக்க வேண்டும். இந்த சான்றிதழை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி மீண்டும் எனது விண்ணப்பத்தின் மீது வினவல் **(QUERY)** செய்துள்ளீர்.

தங்களுக்கு நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது என்னவென்றால் மின் அழுத்த கம்பி மட்டுமே சென்றதால் அதை மாற்றி அமைத்துள்ளோம். அதற்கு உதவி பொறியாளரின் சான்றிதழ் தான் ஆவணமாக உள்ளது. மின் அழுத்த கம்பியை மாற்றி அமைத்ததற்கு வேறு எந்த ஒரு மின் கட்டண ரசீதும் இல்லை என்றும், இனி வரும் காலங்களில் இது தொடர்பாக ஏதாவது சட்ட சிக்கல் ஏற்பட்டால் அதற்கு நானே முழு பொறுப்பு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே நான் **12/06/2026** அன்று பதிவேற்றிய மின் வாரிய உதவி பொறியாளரின் சான்றிதழை மின் கட்டண ரசீதாக ஏற்று கொண்டு எனது விண்ணப்பத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

(V.M.மஞ்சுநாத்)

தேதி: 24.06.2026

சான்று

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பங்கரிஷிகுப்பம் கிராமத்தில் ச.எண்: 67/2A1, 67/2B1A, 67/3C1A மற்றும் 67/3A -ல் தென்மேற்கு பகுதியில் ஓரமாக குறைந்த மின்னழுத்த மின்கம்பி பாதை சென்று கொண்டு இருந்தது அப்பாதையின் மின்கம்பிகள் மிகவும் தாழ்வாக சென்று கொண்டு இருந்ததால் நடைமுறைசிக்கல்கள் அடிக்கடி வந்ததின் பெயரில் சிறிது தூரம் நகர்த்தி மேட்டுபகுதியில் மின்வழிதடத்தை மாற்றி அமைத்தோம். மின் வழித்தடம் ச.எண்: 67/3A, 67/3C1A-ன் வழியாக செல்லவில்லை இதை நான் சான்றாக அளிக்கிறேன்.

ASSISTANT ENGINEER
Rural / South, TANGEDCO
GUDIYATTAM - 632 602.

பெறுநர்:

உதவி இயக்குநர் அவர்கள்,

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், (TNRERA)

D.NO.133, G -பிளக் முதல் அவென்யு

அண்ணா நகர் கிழக்கு

சென்னை – 600102.